Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்






| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 75 | உள்ளூர் - 16.03.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 75 | வெளியூர் - 17.03.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |



என்எல்சி நிறுவனத்தில் காலியிடங்கள் அறிவிப்பு!

விளக்கேற்றும்போது இத்தவறுகளைச் செய்தால், பலன்கள் குறைவு!

தேர்தல் கட்டுப்பாடுகள் விதிப்பு: தேர்தல் ஆணையம்!

ஆஸ்கர் 2026: விருதுகளை அள்ளிய 'ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்'!


# கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடையும்; அதிபர் டிரம்ப்!

வாஷிங்டன், மார்ச். 16–

''போர் மிக விரைவாக முடிவடைந்துவிடும்; அதன் பின் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியடையும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

ஹார்முஸ் ஜலசந்திக்கு போர்க்கப்பல்கள் அனுப்பாத நாடுகள் குறித்து அதிபர் டிரம்ப் விமர்சனம் செய்து உள்ளார். இது குறித்து அதிபர் டிரம்ப் கூறியதாவது: ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க நட்பு நாடுகள் போர்க்கப்பல்களை அனுப்ப வேண்டும். சீனா, ஜப்பான், பிரான்ஸ், நேட்டோ நாடுகள் தற்போது உதவாவிட்டால் அவர்களுக்கு எதிர்காலம் இல்லை. மற்ற நாடுகள் எங்களுடன் பாதுகாப்பு அளிக்க உதவினால் நல்லது. நாங்கள் அவர்களுடன் இணைந்து பணியாற்றுவோம்.



போர் மிக விரைவாக முடிவடைந்துவிடும்; அதன் பின் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி அடையும்; ஈரானிடம் ஏவுகணைகள் குறைந்த அளவில் தான் உள்ளது; இதனால் தான் ஈரான் தாக்குதல்களை குறைத்துள்ளது. நாங்கள் அவர்களின் விமானப்படை, கடற்படை மற்றும் வான் பாதுகாப்பை அகற்றியுள்ளோம். நாங்கள் கார்க் தீவைத் தாக்கினோம். நாங்கள் எப்போதும் நேட்டோவுக்கு ஆதரவாக இருக்கிறோம். இஸ்ரேலுடன் நாங்கள் உண்மையில் மிகவும் இணக்கமாகப் பழகுகிறோம்.

ஹார்முஸ் ஜலசந்தியை பாதுகாப்பது குறித்து நாங்கள் பிற நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். உங்களுக்குத் தெரியுமா? எங்களுக்கு இந்த ஜலசந்தி வழியாக எண்ணெய் கிடைப்பதில்லை; கிடைத்தாலும் மிகக் குறைவாகவே, அதாவது 1 சதவீதம் மட்டுமே கிடைக்கிறது. உதாரணமாக, சீனா தனது மொத்தத் தேவைக்கான எண்ணெயில் 90 சதவீதத்தை ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே பெறுகிறது. எனவே, பிற நாடுகளும் எங்களுடன் இணைந்து இப்பகுதியைப் பாதுகாப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறினார்.

நேட்டோ நாடுகள் மறுப்பு

எனினும் டிரம்ப் கூறியபடி, ஹார்முஸ் ஜலசந்திக்கு தங்கள் நாட்டு போர்க்கப்பலை அனுப்ப எந்த நாடும் முன்வரவில்லை. ஆஸ்திரேலியா வெளிப்படையாகவே, 'நாங்கள் அனுப்ப மாட்டோம்' என்று கூறி விட்டது. மற்ற நாடுகளும் இது பற்றி எதுவும் கருத்து தெரிவிக்காமல் அமைதியாக உள்ளன. நேட்டோ நாடுகளும் தயாராக இல்லை.

# ரூ.50 ஆயிரத்திற்கு மேல் எடுத்து சென்றால் ஆவணம் அவசியம்; தமிழகத்தில் இதுவரை ரூ.1.26 கோடி பறிமுதல்!

சென்னை, மார்ச். 16–

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால் தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தில் இதுவரை ரூ.1.26 கோடி மதிப்புள்ள ரொக்கம் பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என தமிழக தேர்தல் அதிகாரி அர்சனா பட்நாயக் தெரிவித்தார்.

தமிழகம், புதுச்சேரி, கேரளம், மேற்கு வங்கம், அசாம் ஆகிய, ஐந்து மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் நடக்க உள்ளதால் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்தன. தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததால், ஆவணங்கள் இன்றி அதிகபட்சமாக ரூ.50 ஆயிரம் வரை மட்டுமே ரொக்கமாக எடுத்து செல்ல அனுமதி உண்டு. அதற்கு மேல், அதாவது 50 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான



பணத்தை கொண்டு சென்றால், உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; இல்லையெனில், தேர்தல் பறக்கும் படையினரால் பணம் பறிமுதல் செய்யப்படும்.

தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் தேர்தல் பறக்கும் படையினர் அதிரடி வாகன சோதனையில் ஈடுபட்டுள்ளனர். உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம், பரிசுப்பொருட்களை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். நீலகிரி பந்தலூர் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர். திருப்பூர் அவினாசி சாலையில் நடந்த வாகன சோதனையில், உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்ல ரூ. 35 லட்சம் பணத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

உளுந்தூர் பேட்டையில் நடந்த வாகன சோதனையில் ஒரு லட்சம் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்த பிறகு இதுவரை ரூ.1.26 கோடி மதிப்புள்ள ரொக்கம் பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என தமிழக தேர்தல் அதிகாரி அர்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். மேலும் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: தமிழகத்தில் 4 நாட்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய முடியும்.

மார்ச் 31, ஏப்ரல் 3,4 மற்றும் 5ம் தேதிகள் விடுமுறை என்பதால் மனுதாக்கல் செய்ய முடியாது. மார்ச் 30ம் தேதி முதல் ஏப்ரல் 6ம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்ய அவகாசம் அளிக்கப்பட்டு உள்ளது. வேட்புமனுக்கள் காலை 11 மணி முதல் மதியம் 3 மணி வரை பெறப்படும். தேர்தலை முன்னிட்டு 2106 பறக்கும் படைகள் அமைத்து கண்காணிக்கப்படுகிறது. பறக்கும் படையினரின் சோதனையில் பிடிபடும் பணம் அல்லது பொருட்களுக்கு உரிய ஆவணங்கள் இருந்தால் ஒப்படைக்கப்படும். இவ்வாறு அர்சனா பட்நாயக் கூறினார்.

# மத்திய, மாநில அமைச்சர்கள், எம்.பி., எம்எல்ஏக்கள், அரசியல்வாதிகளுக்கு

## தேர்தல் ஆணையம் கட்டுப்பாடு!




புதுடெல்லி, மார்ச். 16–

தமிழகம், கேரளம், அஸ்ஸாம், மேற்கு வங்கம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேச சட்டப்பேரவைகளுக்கான தேர்தல் தேதி ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டதையடுத்து அந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன.

இது தொடர்பாக மத்திய அமைச்சரவை செயலர், தேர்தலை எதிர்கொள்ளும் மாநிலங்களின் அரசு தலைமைச் செயலர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரிகள் ஆகியோருக்கு தேர்தல் ஆணையம் சில உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு:

அமைச்சர்கள் தங்களுடைய அலுவல்பூர்வ பயணத்தை தேர்தல் பிரசார பணிகளுடன் இணைக்கக்கூடாது. தேர்தல் பிரசார பணிகளின்போது அரசு இயந்திரத்தையோ அரசு பணியாளர்களையோ பயன்படுத்தக்கூடாது. அரசுக்குச் சொந்தமான விமானங்கள், வாகனங்கள், இயந்திரங்கள், ஊழியர்கள் உள்ளிட்ட அரசுப் போக்குவரத்து வசதிகள் எவையும், ஆளும் கட்சியின் நலன்களை முன்னெடுக்க பயன்படுத்தப்படக் கூடாது.

தேர்தல் கூட்டங்களை நடத்துவதற்காக மைதானங்கள் போன்ற பொது இடங்களைப் பயன்படுத்துவதையும், தேர்தல் தொடர்பான விமானப் பயணங்களுக்காக ஹெலிபேட்களைப் பயன்படுத்துவதையும் ஆளும் கட்சி மட்டுமின்றி பிற கட்சிகளும் வேட்பாளர்களும் அந்த வசதிகளை பயன்படுத்த உரிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின்படி அனுமதிக்கப்பட வேண்டும்.

தேர்தல்கள் அறிவிக்கப்பட்டுள்ள அல்லது நடைபெற்று வரும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் உள்ள அரசு விருந்தினர் இல்லங்கள், தங்கும் விடுதிகள் அல்லது பிற அரசு தங்கும் வசதிகள், 'இசட்' பிரிவு அல்லது அதற்கு இணையான பாதுகாப்பு வசதியை பெற்றுள்ளவர்களுக்கு மத்திய, மாநில அரசுகளின் அனுமதியுடன் சம அடிப்படையில் ஒதுக்கப்படலாம்.

அத்தகைய தங்கும் வசதிகள் ஏற்கெனவே தேர்தல் அலுவலர்களுக்கோ தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர்களுக்கோ ஒதுக்கப்படாமலோ இருந்தால் அவர்கள் தங்க அனுமதிக்கப்படலாம். தங்கும் நாள்களில் அவர்கள் எவ்விதமான அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது.

தேர்தல் காலத்தில், அரசு நிதியைப் பயன்படுத்தி நாளிதழ்கள் மற்றும் பிற ஊடகங்களில் விளம்பரங்களை வெளியிடுவதும், ஆளுங்கட்சியின் வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்கிலும், அரசியல் செய்திகளுக்குச் சார்புத்தன்மையுடன் கூடிய முக்கியத்துவம் அளிப்பதற்கும், அரசின் சாதனைகள் குறித்த விளம்பரங்களை வெளியிடுவதற்கும் அரசுக்குச் சொந்தமான வெகுஜன ஊடகங்களைத் தவறாகப் பயன்படுத்துவதும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையத்தால் தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட நேரம் முதல், அமைச்சர்களும் பிற அதிகாரிகளும் தங்கள் விருப்புரிமை நிதியிலிருந்து எவ்வித மானியங்களையோ பணப் பட்டுவாடாக்களையோ வழங்கக் கூடாது.

அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் எவ்விதமான நிதி மானியங்களையும் (எந்த வடிவத்திலும்) அறிவிக்கவோ அதுகுறித்த வாக்குறுதிகளையோ அளிக்கக கூடாது.

அரசு ஊழியர்கள் நீங்கலாக எவ்வித திட்டங்கள் அல்லது பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுதல் போன்ற நிகழ்வுகளை நடத்தக் கூடாது. சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதிகள் நிறுவுதல் போன்ற பணிகள் குறித்த எவ்வித வாக்குறுதிகளையும் அளிக்கக் கூடாது. அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் போன்றவற்றில், ஆளும் கட்சிக்குச் சாதகமாக வாக்காளர்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான தற்காலிக நியமனங்கள் எதையும் மேற்கொள்ளக்கூடாது.

அரசு நிதியைப் பயன்படுத்தி, அரசின் சாதனைகளை முன்னிலைப்படுத்தும் வகையிலான விளம்பரங்கள் எதையும் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியிடக்கூடாது. ஏதேனும் விளம்பரம் ஏற்கெனவே ஒளிபரப்பு/ஒலிபரப்பு அல்லது அச்சு ஊடக வெளியீட்டிற்காக அனுப்பப்பட்டிருந்தால், அவை உடனடியாக நிறுத்தப்படுவதையும்; தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதலே செய்தித்தாள்கள், இதழ்கள் போன்ற அச்சு ஊடகங்களில் அத்தகைய விளம்பரங்கள் எதுவும் வெளியாகாமல் இருப்பதையும் உறுதி செய்ய வேண்டும். முன்பே விளம்பரங்கள் அளிக்கப்பட்டிருந்தால் அவை உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

# கட்டாக் மருத்துவமனையில் பயங்கர தீ விபத்து: 10 நோயாளிகள் பலி!

ஒடிசா, மார்ச். 16–

கட்டாக் மருத்துவமனையில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 10 நோயாளிகள் பலியான நிகழ்வு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசாவின் கட்டாக்கில் அரசு நடத்தும் எஸ்சிபி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் திங்கள்கிழமை அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் மருத்துவமனைக்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

தீயணைப்புத் துறை அதிகாரிகள், மருத்துவமனை ஊழியர்கள், போலீஸார்




மற்றும் நோயாளிகளின் உதவியாளர்களுடன் இணைந்து ஐசியு–வில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளை மீட்டு எஸ்சிபி மருத்துவமனையின் மற்ற பிரிவுகளுக்கு மாற்றினர்.

எனினும், இந்த தீ விபத்தில் 10 நோயாளிகள் பலியாகினர். நோயாளிகளை மீட்கும் பணியில் ஈடுபட்டபோது 11 மருத்துவமனை ஊழியர்கள் தீக்காயமடைந்தனர். முதல்வர் மோகன் சரண் மாஜி, சுகாதாரத்துறை அமைச்சர் முகேஷ் மகாலிங்குடன் மருத்துவமனைக்குச் சென்று நிலைமையை ஆய்வு செய்தார்.

மேலும், அங்கு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளையும் அவர் சந்தித்து ஆறுதல் கூறினார். காயமடைந்த நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் முதல்வர் குறிப்பிட்டார்.

தீ விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு உடனடியாக அறிக்கை அளிக்க வேண்டும் என தீயணைப்புத் துறை தலைவரிடம் முதல்வர் மோகன் சரண் மாஜி கேட்டுக்கொண்டார்.

# தமிழகத்தில் என்டிஏ ஆட்சி: மேட்ரிஸ் - ஐஏஎன்எஸ் கருத்துக் கணிப்பில்?

புதுடெல்லி, மார்ச். 16–

மேற்கு வங்கத்தில் முதல்வர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி 4–வது முறையாக ஆட்சியைத் தக்கவைக்கும். தமிழகத்தில் அதிமுக தலைமையிலான என்டிஏ கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் என்று 'மேட்ரிஸ் – ஐஏஎன்எஸ் நடத்திய கருத்துக் கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 இடங்களில், திரிணமூல் காங்கிரஸ் 155–170, பாஜக 100–115, மஜ்லிஸ் 5–6 இடங்களை கைப்பற்றும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்பார் என்று கணிக்கப்பட்டாலும், இம்முறை திரிணமூல் காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசியல் களம் குறித்து இக்கருத்துக் கணிப்பு வெளியிட்டுள்ள தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் திமுக கூட்டணியை பின்னுக்குத் தள்ளி, தேசிய ஜனநாயகக் கூட்டணி (என்டிஏ) ஆட்சியைக் கைப்பற்ற வாய்ப்புள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மொத்தமுள்ள 234 இடங்களில் என்டிஏ 114–127 இடங்களையும், திமுக, 104 – 114 இடங்களையும், விஜய்யின் தமிழக வெற்றி கழகத்துக்கு 6 – 12 இடங்களும் கிடைக்கும் என்று கருத்து கணிப்பு கூறியுள்ளது. அசாமில் பாஜக பெரும்பான்மையான இடங்களை வென்று ஆட்சியை தக்க வைக்க வாய்ப்புள்ளதாகவும் கேரளாவில் இடது முன்னணி, காங்கிரஸ் கூட்டணி இடையே இழுபறி நீடிப்பதாக கருத்துகணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 16.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 02-ம் தேதி

## துபாயிலிருந்து வெளியேறுவது கடினமாகுமா?




அமெரிக்கா–ஈரான் போருக்குப் பிறகு, உலகின் அதிகாரச் சமநிலை மாறி வருவதாகக் கூறப்படுகிறது. மேற்காசிய பிராந்தியத்தில் உள்ள இஸ்லாமிய நாடுகளில் இருக்கும் கடுமையான சட்டங்கள் காரணமாக அங்குள்ள கள நிலவரம் அதிகளவு பகிரப்படுவதில்லை.

இந்த சூழலில், துபாயிலிருந்து முதலீட்டை வெளியே எடுக்க முயலும் முதலீட்டாளர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து ஐக்கிய அரபு அமீரகம் (UAE) ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிதி மற்றும் சட்ட வட்டாரங்களின் தகவலின்படி, முதலீட்டை திரும்பப் பெறத் திட்டமிட்டதாக அறிவிக்கும் தொழிலதிபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு பணம் வெளியே மாற்றுவதிலும், நாட்டை விட்டு வெளியேறுவதிலும் தடைகள் விதிக்கும் நடவடிக்கைகள் குறித்து அரசு பரிசீலனை நடத்துகிறது.

இதன் ஒரு பகுதியாக, வங்கி கணக்குகளை தற்காலிகமாக முடக்கம் செய்வது, பணப் பரிவர்த்தனைகளுக்கு கட்டுப்பாடு விதிப்பது, முதலீட்டை வெளியே மாற்ற முயற்சிப்பதாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு வெளிநாடு பயணத் தடை விதிப்பது போன்ற நடவடிக்கைகள் குறித்து விவாதங்கள் நடைபெறுவதாக கூறப்படுகிறது.

பிராந்திய மோதல்கள் மற்றும் ஈரான் தொடர்பான பதற்றம் காரணமாக வர்த்தகம், கப்பல் போக்குவரத்து, விமான சேவைகள் போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை பாதிக்கக்கூடும் என அதிகாரிகள் கவலை தெரிவித்து வருகின்றனர். இதனால் திடீரென வெளிநாட்டு முதலீடுகள் வெளியேறுவதைத் தடுக்க முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க முயற்சி நடப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

ஆனால், முதலீட்டாளர்களுக்கு சொத்து முடக்கம் அல்லது பயணத் தடை போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவது துபாய் நீண்ட காலமாக உருவாக்கியிருந்த திறந்த மற்றும் பாதுகாப்பான வணிக மையம் என்ற பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடும் . இந்நிலையில், பொருளாதார நிலைத்தன்மையை பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கைகள் குறித்து UAE அதிகாரிகள் தீவிரமாக ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது.

## தமிழகத்தில் 75 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும்- தலைமை தேர்தல் கமிஷனர் தகவல்!




புதுடெல்லி, மார்ச். 16–

தமிழ்நாடு, புதுச்சேரி உள்பட 5 மாநில தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கான விரிவான ஏற்பாடுகளை தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் அறிவித்தார்.

அதன்படி இந்த தேர்தலில் வாக்களிக்க தகுதி வாய்ந்த வாக்காளர்களாக மேற்கு வங்காளத்தில் 6.4 கோடி பேர், தமிழ்நாட்டில் 5.67 கோடி, கேரளாவில் 2.7 கோடி, அசாமில் 2.5 கோடி, புதுச்சேரியில் 9.44 லட்சம் பேர் உள்ளனர். இவர்கள் வாக்களிப்பதற்காக 5 மாநிலங்களிலும் மொத்தம் 2,18,807 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும். இதில் அசாமில் 31,486, கேரளாவில் 30,471, தமிழ்நாட்டில் 75,032, மேற்கு வங்காளத்தில் 80,719, புதுச்சேரியில் 1,099 வாக்குச்சாவடிகள் இருக்கும்.

5 மாநில தேர்தலுக்காக மொத்தம் 25 லட்சம் அதிகாரிகள் பணியமர்த்தப்படுவார்கள். இதில் தேர்தல் அதிகாரிகள் 15 லட்சம், பாதுகாப்பு படையினர் 8.5 லட்சம்,நுண்பார்வையாளர்கள் 49,000, தேர்தல் பார்வையாளர்கள் 1,444, வாக்கு எண்ணிக்கை அதி காரிகள் 40,000, துறை அதிகாரிகள் 21,000, வாக்கு எண்ணிக்கை நுண் பார்வை யாளர்கள் 15,000 ஆகியோர் அடங்குவர். சட்டசபை தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற இவர்கள் உதவுவார்கள் என ஞானேஷ் குமார் தெரிவித்தார்.

## உலக சிறுநீரக தினம்: தமிழ்நாட்டில் அப்போலோ டயாலிசிஸ் தெற்கு ரயில்வே இணைந்து விழிப்புணர்வு இயக்கம்!




சென்னை, மார்ச். 16–

உலக சிறுநீரக தினம் 2026 முன்னிட்டு அப்போலோ டயாலிசிஸ் கிளினிக்குகள் தமிழ்நாட்டில் உள்ள தனது 33 கிளினிக்குகள் முழுவதும் சிறுநீரக ஆரோக்கியம் குறித்த பெரிய அளவிலான விழிப்புணர்வு இயக்கத்தை நடத்தியது. "முன்கூட்டியே பரிசோதியுங்கள்; ஆரோக்கியமாக வாழுங்கள்" என்ற செய்தி மையமாகக் கொண்டு நடைபெற்ற இந்த முயற்சி, சிறுநீரக நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறியும் பரிசோதனைகள் அவசியத்தையும், தடுப்பு நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் பொதுமக்களிடம் எடுத்துரைத்தது.

இந்த பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, பெரம்பூரில் உள்ள தெற்கு ரயில்வே மத்திய மருத்துவமனையில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் 100க்கும் மேற்பட்ட ரயில்வே பணியாளர்கள் மற்றும் பயனாளர்கள் கலந்து கொண்டனர். முன்னணி மருத்துவர்கள் சிறுநீரக ஆரோக்கியம் மற்றும் வழக்கமான சுகாதார பரிசோதனைகளின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், நீடித்த சிறுநீரக நோயுடன் வாழ்ந்து சாதனை படைத்தவர்கள் மற்றும் டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் அனுபவங்கள் பகிரப்பட்டன. நிகழ்ச்சியில் பேசிய அப்போலோ டயாலிசிஸ் கிளினிக்குகள் தலைமை இயக்க அதிகாரி திரு. எம். சுதாகர் ராவ், "சிறுநீரக நோய் பெரும்பாலும் ஆரம்ப அறிகுறிகளின்றி உருவாகிறது. எனவே வழக்கமான சுகாதார பரிசோதனைகள் மிகவும் அவசியம்.

இந்தியா முழுவதும் 175–க்கும் மேற்பட்ட கிளினிக்குகள் மற்றும் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட டயாலிசிஸ் அமர்வுகளின், தரமான சிறுநீரக பராமரிப்பு அனைவருக்கும் எளிதாக கிடைக்கச் செய்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்," என்றார்.


## சென்னையில் ரவுடி என்கவுன்டரில் சுட்டுக்கொலை!



சென்னை, மார்ச். 16–

சென்னை மாதவரம் அருகே ரவுடி தொப்பை கணேசனை போலீசார் என்கவுன்டரில் சுட்டுக்கொன்றனர். மாதவரம் ரவுண்டானா அருகே ரவுடி தொப்பை கணேசனை பிடிக்கச் சென்றபோது போலீசாரை தாக்க முயன்றதால் என்கவுன்டர் செய்யப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. ஜனவரி 30–ந்தேதி வசந்தா என்பவரது வீட்டில் ரூ.25 லட்சம், 15 சவரன் நகைகள் கொள்ளையடித்த வழக்கில் ரவுடி கணேசனை பிடிக்க முயன்றபோது தாக்க முயன்றதால் அவரை போலீசார் என்கவுன்டரில் சுட்டுக்கொன்றனர். ரவுடி தொப்பை கணேசன் மீது பல்வேறு கொலை, கொள்ளை வழக்குகள் நிலுவையில் உள்ளன.

## விளக்கேற்றும்போது நீங்கள் இந்தத் தவறுகளைச் செய்தால், பூஜையின் பலன்கள் குறைந்துவிடும்..!





இந்திய மரபில், ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் வீட்டில் விளக்கேற்றுவது ஒரு தொன்மையான வழக்கமாகும். இருளை அகற்றி, வீட்டை ஒளியால் நிரப்பும் இந்த விளக்கு, அறியாமையை அழித்து, வீட்டை நேர்மறை ஆற்றலால் நிரப்புகிறது. இருப்பினும், விளக்கேற்றி இறைவனை வழிபடும்போது, வெறும் பக்தியானது மட்டும் போதுமானதல்ல; நமது புராணங்களும் ஆன்மீக சாஸ்திரங்களும் வகுத்துள்ள சில குறிப்பிட்ட விதிமுறைகளையும் நாம் தவறாமல் பின்பற்ற வேண்டும். அவ்வாறு விதிமுறைகளைப் பின்பற்றி வழிபடும்போது மட்டுமே, நாம் செய்யும் பூஜை முழுமையான பலன்களை அளித்து, வீட்டிற்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் கொண்டுவரும்.

விளக்கு வழிபாட்டிற்கு எண்ணெயைப் பயன்படுத்துவதை விட, தூய பசு நெய்யைப் பயன்படுத்துவதே ஆன்மீக ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அதிக நன்மைகளைத் தரக்கூடியதாகும். தூய பசு நெய்யானது, காற்றில் பரவியுள்ள தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்களை அழிக்கும் இயற்கையான பண்புகளைக் கொண்டுள்ளது. இந்த நெய் தீயுடன் இணையும்போது, சுற்றுப்புறத்தில் உள்ள எதிர்மறை ஆற்றல் அகற்றப்பட்டு, வீடு முழுவதும் புனிதத்தன்மை பெறுகிறது. இது வீட்டில் உள்ள அனைவருக்கும் மன அமைதியைத் தருகிறது. இதனால்தான், இயன்றவரை நெய் விளக்குகளையே ஏற்றுவது சிறந்தது என்று கருதப்படுகிறது.

பொதுவாக, ஒரு தெய்வத்தை வழிபடுவதைத் தொடங்குவதற்கு முன், முதலில் அக்னி பகவானை (தீக்கடவுளை) நினைத்து, ஒரு சிறிய ஆரத்தி விளக்கையோ அல்லது ஒரு சிறு விளக்கை மட்டுமோ ஏற்றுவது ஒரு சிறந்த வழக்கமாகும். வழிபாடு முடியும் வரை அந்த விளக்குச் சுடர் அணையாமல், சீராகவும் பிரகாசமாகவும் எரிய வேண்டும் என்று நாம் மனதாரப் பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு முதன்மை விளக்கை ஏற்றிய பின்னரே, மூலவர் தெய்வத்தின் முன் உள்ள விளக்கை நாம் ஏற்ற வேண்டும். இந்த முறையில், முழு பக்தியுடன் விளக்கேற்றினால், மகாலட்சுமி தேவி மனம் மகிழ்ந்து, அந்த வீட்டில் நிரந்தரமாகக் குடியேறுவாள் என்று நமது பண்டைய சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**விளக்கில் எத்தனை திரிகளைப் பயன்படுத்த வேண்டும்?**

ஒரே விளக்கில் எத்தனை திரிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்துப் பலருக்கும் ஐயங்கள் எழுகின்றன. சாஸ்திரங்களின்படி, ஒரு அகல் விளக்கில் இரண்டு திரிகளைப் பயன்படுத்தி, அவை ஒரே சுடராக எரியும் வகையில் ஏற்ற வேண்டும் (ஒற்றைத் திரியை மட்டும் கொண்டு விளக்கேற்றுவது உகந்ததல்ல).

பல முகங்களைக் கொண்ட விளக்குகளை ஏற்றும்போது, 3 அல்லது 5 என ஒற்றைப்படை எண்ணிக்கையிலான முகங்களை ஏற்றுவதே சிறந்தது. ஒரே விளக்கில் எண்ணெயையும் நெய்யையும் கலந்து ஒருபோதும் ஏற்றக்கூடாது. நெய்யானது 'சத்துவ குணத்தை'க் குறிப்பதாகவும், எண்ணெயானது 'ராஜச குணத்தை'க் குறிப்பதாகவும் கருதப்படுகிறது. ஒன்றுக்கொன்று முரணான இந்த இரண்டு ஆற்றல்களையும் ஒன்றாகக் கலக்கும்போது, 'தாமச குணம்' அதிகரித்து, வீட்டில் எதிர்மறை ஆற்றல் நுழைவதற்கான அபாயம் ஏற்படுகிறது.

**விளக்கின் திரிகள் எந்த திசையை நோக்கி அமைந்திருப்பது சிறந்தது?**

விளக்கேற்றும்போது, அதன் திரிகள் எந்த திசையை நோக்கி அமைந்துள்ளன என்பதைத் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியமான ஒன்றாகும். சாஸ்திரங்களின்படி, இறைவனின் திருவுருவப் படத்திற்கு இடதுபுறத்தில் எண்ணெய் விளக்கும், வலதுபுறத்தில் நெய் விளக்கும் ஏற்றப்பட வேண்டும். நீங்கள் உங்கள் நிதிப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, செல்வத்தை பன்மடங்கு பெருக்க விரும்பினால், விளக்கின் திரியை வடக்கு திசையை நோக்கி இருக்குமாறு வைத்து ஏற்ற வேண்டும். வீட்டில் உள்ள யாரேனும் உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தால், விளக்கின் திரி கிழக்கு திசையை நோக்கி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு திசைகள் எப்போதும் நற்பலன்களையே அளிக்கின்றன. மாறாக, தவறுதலாக விளக்கின் திரியை மேற்கு அல்லது தெற்கு திசையை நோக்கி வைத்துவிட்டால், நீங்கள் தேவையற்ற சிரமங்களைச் சந்திக்க நேரிடலாம்.

**விளக்கு எதிர்பாராதவிதமாக அணைந்து போனால் என்ன செய்வது?**

பூஜை நடைபெறும்போதோ, ஆரத்தி காட்டும்போதோ அல்லது காற்றின் காரணமாகவோ விளக்கில் உள்ள எண்ணெய் தீர்ந்து விளக்கு அணைந்து போனால், ஏதோ ஒரு பெரிய அபசகுனம் நிகழ்ந்துவிட்டதாகப் பலர் கவலை கொள்கின்றனர். இதைக் குறித்துக் கவலைப்படத் துளியும் அவசியமில்லை. ஒருவர் மனதிற்குள் இறைவனிடம் மன்னிப்பு கோரிவிட்டு, அமைதியான மனதுடன் அந்த விளக்கை மீண்டும் ஏற்ற வேண்டும். இருப்பினும், இறைவனுக்கு ஆரத்தி காட்டும் வேளையில் விளக்கு கைநழுவி கீழே விழுந்துவிட்டால், நீங்கள் வழிபடும் இஷ்ட தெய்வத்தின் நாமத்தை உச்சரித்துவிட்டு, உங்கள் வீட்டின் பெரியவர்கள் அல்லது குல வழக்கப்படி சிறிய அளவிலான சாந்தி பூஜைகளைச் செய்வது சிறந்தது.

**துளசிச் செடியின் அருகில் விளக்கு ஏற்றுவது எப்படி?**

துளசிச் செடியின் அருகில் விளக்கு ஏற்றும்போது, அதை நேரடியாகத் தரையில் வைக்கக்கூடாது. முதலில், தரையில் சிறிது அட்சதைகளை (முழு அரிசி மணிகள்) பரப்பி ஒரு மேடையை அமைத்து,

அதன் மீது நெய் அல்லது எண்ணெய் விளக்கை வைக்க வேண்டும். நமது புராணங்களின்படி, இவ்வாறு அட்சதைகளின் மீது விளக்கை ஏற்றுவது, அன்னை மகாலட்சுமியே அந்த ஆசனத்தில் அமர்ந்திருப்பதைப் போன்றதாகும். நீங்கள் இவ்வாறு செய்தால், அன்னை மகாலட்சுமி உங்கள் வழிபாட்டை மனமகிழ்வுடன் ஏற்றுக்கொள்வாள்.

## திருப்பூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!



திருப்பூர், மார்ச். 16–

திருப்பூரில் தென் இந்திய பார்வர்டு பிளாக் கட்சி நிறுவனத் தலைவர் கே சி திருமாறன் ஜி அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு புதிய பேருந்து நிலையத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் அறுசுவை அசைவ உணவு வழங்கும் விழா ,கொங்கு மண்டல தலைவர் காசிராஜன் தலைமையில் நடைபெற்றது இதில் சட்டமன்ற உறுப்பினர் கே என் விஜயகுமார் பாரதிய ஜனதா கட்சி மாவட்ட தலைவர் சீனிவாசன் மக்கள் ஜனநாயகம் முன்னேற்றக் கழக தலைவர் இப்ராஹிம் பாதுஷா முக்குலத்தோர் தேசிய கழக நிறுவன தலைவர் எஸ் பி ராஜா தேவர் பசும்பொன் பக்தர்கள் பேரவை நிறுவனத் தலைவர் ராயல் லட்சுமணன் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர் தாய்மார்கள் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு சேலைகள் வழங்கப்பட்டது.

இதில் நிர்வாகிகள் மாவட்ட பொதுச் செயலாளர்கள் விஜய் மாவட்ட செயலாளர் சண்முகராஜ் வடக்கு மாவட்ட அமைப்பு செயலாளர் பிரகாஷ் வடக்கு மாவட்ட செயற்குழு மணிகண்டன் வடக்கு மாவட்ட இளைஞரணி ரமேஷ் வடக்கு மாவட்ட தொழிற்சங்க அய்யப்பன் வடக்கு மாவட்ட தொண்டர் அணி ஸ்ரீகாந்த் வடக்கு மாவட்ட தொண்டர்கள் துணைச் செயலாளர் வெற்றி மற்றும் கார்த்திக் சிவ சூர்யா வசந்த் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்டதை தொடர்ந்து அமைக்கப்பட்டுள்ள ஊடக சான்றிதழ் மற்றும் கண்காணிப்பு மையத்தில் செயல்பாட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித்சிங் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



பழனியில் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிப்பது தொடர்பாக துணை ராணுவத்தினர் மற்றும் காவல் துறையினர் இணைந்து நகரப் பகுதியில் பேரணி சென்றனர்

## ஓபிஎஸ் அணியினர் திமுகவில் இணைந்தனர்!



திருப்பூர், மார்ச் 16–

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஓ பன்னீர்செல்வம் அவர்களின் ஆதரவாளர்கள் அவரது தலைமையில் திமுகவில் இணைந்தனர் அதன் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்ட செயலாளராக பணிபுரிந்த டாக்டர் கனிஷ்கா சிவக்குமார் தலைமையில் பெருமாநல்லூரில் உள்ள தனியார் மஹாலில் நூற்றுக்கு மேற்பட்ட நிர்வாகிகள் திருப்பூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் மேயர் தினேஷ்குமார். மாநகர பொறுப்பாளர் தங்கராஜ். ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன் ஆகியோரது முன்னிலையில் தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர் மேலும் தமிழக வெற்றி கழக நிர்வாகிகளும் 50க்கும் மேற்பட்டோர் இணைந்தனர் இந்த நிகழ்வில் மாநில பிரச்சார குழு செயலாளர் உமா மகேஸ்வரி. கிளைச் செயலாளர் வேலுச்சாமி. முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சாந்தாமணி. மாவட்ட பிரதிநிதி சண்முகம். ஒன்றிய துணைச் செயலாளர்கள் அண்ணாதுரை.

மணிமுத்து. மீனாட்சி திருமூர்த்தி. ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சிடிசி மணிகண்டன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்...

## பழனியில் திமுக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம்!




பழனி, மார்ச். 16–

பழனி தாலுகா அலுவலகம் அருகே திண்டுக்கல் எம்பி சச்சிதானந்தம் தலைமையில் திமுக கூட்டணி கட்சியினர் மத்திய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் நகர திமுக செயலாளர் வேலுமணி, ஒன்றிய செயலாளர் சாமிநாதன், நகர் மன்ற தலைவர் உமா மகேஸ்வரி, துணைத் தலைவர் கந்தசாமி, முன்னாள் நாடாளுமன்ற தலைவர் ராஜமாணிக்கம், இளைஞர் அணி லோகநாதன், முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் எஸ் கே கே ஹக்கீம், திமுக நிர்வாகிகள் ஏ கே எம் சக்திவேல்,கவுன்சிலர்கள் சுரேஷ், இந்திரா திருநாவுக்கரசு, விமலா பாண்டியன், சாகுல் அமீது, ஜெபாஸ்டின், திமுக ராஜா, காங்கிரஸ் நிர்வாகிகள் கவுன்சிலர் பத்மினி முருகானந்தம், முத்து விஜயன், முன்னாள் கவுன்சிலர் எஸ் சுந்தர், ராமநாத கிருஷ்ணன், குப்புசாமி, தேவேந்திரன், முகமது அலி, சாயிரா பானு, விடுதலை சிறுத்தைகள் கட்சி பொற்கொடி ஏந்தி, ஐயப்பன் உள்பட ஏராள மானவர்கள் பங்கேற்றனர்.

## ஆண்டிபட்டியில் தி.மு.க. கூட்டணி கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்!



ஆண்டிபட்டி, மார்ச் 16,

தேனி மாவட்டம், ஆண்டிபட்டியில், தமிழ்நாட்டிற்குப் புதிய திட்டங்களை அறிவிக்காதது மற்றும் சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டைப் போக்கத் தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமை தாங்கினார். திமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் முன்னிலை வகித்தார்.

இதில் திமுக பேரூர் செயலாளர் சரவணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செஞ்சூரி செல்வம், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரகாஷ், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த சுப்புராஜ், ரவி, தே.மு.தி.க . பேரூர் செயலாளர் பாலாஜி, மற்றும் பாலமுருகன், சதீஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த வெங்கடேசன், ராமர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த பரமேஸ்வரன், பிச்சைமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த குழந்தைராஜ், தமிழ் புலிகள் அமைப்பை சேர்ந்த மாரி, ஆதிதமிழர் பேரவை மல்லையாசாமி, ஆதித் தமிழர் கட்சி தங்கபாண்டி, மக்கள் விடுதலை கட்சி பாண்டி உள்ளிட்ட ஏராளமான கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராகத் தங்களது கண்டனத்தைப் பதிவு செய்தனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## வளர்சிதை மாற்றம் மேம்பட, சீரான செரிமானம் பெற ஆயுர்வேதம் சொல்லும் டிப்ஸ்!



இன்றைய நவீன காலத்தில், பெரும்பாலான மக்களின் வாழ்க்கை முறைகளும் உணவுப் பழக்கங்களும் சீரழிந்து விட்டன. இன்றைய வேகமான வாழ்க்கையில், நாம் பெரும்பாலும் சிந்திக்காமல் சாப்பிடுகிறோம். அதிகமாக சாப்பிடுவது உடலை வலிமையாக்கும் என்று பலர் நம்புகிறார்கள். இருப்பினும், உண்மை வேறு.

அதிகமாக சாப்பிடுவது பெரும்பாலும் வயிறு மற்றும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும். இருப்பினும், குறைவாகவும் மிதமாகவும் சாப்பிடுவது உடலை இலகுவாகவும், ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் வைத்திருக்கும். உடல் ஆரோக்கியத்திற்கு சரியான அளவில் சாப்பிடுவது ஏன் அவசியம்? ஆயுர்வேதத்தின் படி சாப்பிடுவதற்கான சரியான விதிகள் என்ன? இவற்றை பற்றி இந்த பதிவில் காணலாம்.

**குறைவாகவும் மிதமாகவும் சாப்பிடுவதன் நன்மைகள்**

குறைவாகவும் மிதமாகவும் சாப்பிடுவது வயிற்றை இலகுவாக வைத்திருக்கிறது. இதனால் உணவு எளிதில் ஜீரணமாகும். இது செரிமான அமைப்பில் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்கிறது. மேலும் இது வாயு, வீக்கம் மற்றும் மலச்சிக்கல் போன்ற பிரச்சினைகளைக் குறைக்கும். மிதமாக சாப்பிடுவது ஆற்றலையும் சேமிக்கிறது. அதிகமான மற்றும் கனமான உணவை ஜீரணிக்க அதிக முயற்சி தேவைப்படுகிறது, இது சோம்பல் மற்றும் சோர்வுக்கு வழிவகுக்கும். குறைவாகவும் மிதமாகவும் சாப்பிடுவது உடல் பருமன் அபாயத்தைக் குறைக்கிறது. மேலும், உடலை மிகவும் சுறுசுறுப்பாகவும் இலகுவாகவும் இது உணர வைக்கிறது.

**வளர்சிதை மாற்றம் துரிதப்படுத்துகிறது**

சிறிய அளவிலான மற்றும் சீரான உணவை சாப்பிடுவது உடலின் வளர்சிதை மாற்றத்தை மேம்படுத்துகிறது. இது உணவை வேகமாக ஜீரணிக்க உதவுகிறது. மேலும் உடலுக்கு சரியான ஊட்டச்சத்தை வழங்குகிறது. தேவைக்கேற்ப சாப்பிடுவது செரிமானத்தை மேம்படுத்தி உடலை சுறுசுறுப்பாக வைத்திருப்பதாக பல ஆய்வுகள் காட்டுகின்றன.

சிறிய அளவிலான மற்றும் சீரான உணவை உட்கொள்வது அமிலத்தன்மை மற்றும் நெஞ்செரிச்சல் ஆகியவற்றைக் குறைக்கும். கனமான மற்றும் வறுத்த உணவுகளை சாப்பிடுவது வயிற்று அமிலத்தை அதிகரிக்கிறது, இதனால் செரிமான பிரச்சனைகள் ஏற்படுகின்றன. உடலுக்குத் தேவையான அளவு மட்டுமே சாப்பிடுவது மிகவும் முக்கியம். அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இல்லாமல் மிதமாக சாப்பிடுவது நல்ல ஆரோக்கியத்திற்கு முக்கியமாகும். பசிக்கும் போது சாப்பிடுங்கள், வயிறு நிரம்புவதற்கு சற்று முன்பு நிறுத்துங்கள், இது நல்ல செரிமானத்தை ஊக்குவிக்கிறது.

**ஆயுர்வேதத்தின் படி எப்போது, எப்படி சாப்பிடுவது?**

ஆயுர்வேதத்தின் படி, வயிற்றுக்கு மூன்று வகையான உணவு கொடுக்கப்பட வேண்டும்:

ஒரு பாகம் திட உணவு,
ஒரு பாகம் திரவ உணவு மற்றும்
ஒரு பாகம் வெற்றாக இருக்க வேண்டும்.

பொதுவாக, வயிற்றுக்கு எப்போதும் 70% உணவு கொடுக்கப்பட வேண்டும், ஒரு பகுதி காலியாக இருக்க வேண்டும். இது ஆயுர்வேதத்தில் அதிகமாக வலியுறுத்தப்படுகின்றது.

(**பொறுப்பு துறப்பு:** இந்தச் செய்தி உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம். இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். இந்த தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.)



தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், திண்டுக்கல் மாவட்டம் சார்பாக, மாவட்ட சிறுதானிய உணவு உணவகம். பழனி மகளிர் குழு சார்பாக, பழனி அரசு தலைமை மருத்துவமனையில், இன்றிலிருந்து சத்தான நவதானிய வகைகள் விற்பனைக்கு துவங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குனர் மற்றும் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் உதயகுமார் மற்றும் இணை இயக்குனர்களால் துவங்கப்பட்டது. டிஎம்எஸ்ஜே மேலாளர், மாவட்ட வள பயிற்றுனர் மற்றும் வட்டார மேலாளர் பிரியா, வட்டார ஒருங்கிணைப்பாளர் பிரீத்தா, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# உணவு பாதுகாப்பு தரச் சான்றிதழை இனி புதுப்பிக்க தேவையில்லை: எப்எஸ்எஸ்ஏஐ அறிவிப்பு!




புதுடெல்லி, மார்ச். 16–

உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு தேவையான இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (எப்எஸ்எஸ்ஏஐ) பதிவுச் சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள் இனி நிரந்தரமாகச் செல்லும் என்றும் அவற்றைப் புதுப்பிக்கத் தேவையில்லை என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக எப்எஸ்எஸ்ஏஐ கடந்த 13–ம் தேதி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்தியாவில் உணவுப் பாதுகாப்புத் தரத்தை வலுவாகப் பராமரிக்கும் அதே வேளையில், தொழில் செய்வதை எளிதாக்கும் நோக்கத்துடன் கூடிய முக்கிய ஒழுங்கு முறை மற்றும் நடைமுறைச் சீர்திருத்தங்களுக்கு மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் ஒப்புதல் வழங்கி உள்ளது.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தொழில் துறையினருடன் நடத்தப்பட்ட விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு இந்தச் சீர்திருத்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. இவை நிதி ஆயோக் அமைத்த நிதி சாரா ஒழுங்கு முறை சீர்திருத்தங்களுக்கான உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்கவும் அமைந்துள்ளன.

இதன்படி, உணவுப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனைக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தால் (எப்எஸ்எஸ்ஏஐ) வழங்கப்படும் பதிவுகள் மற்றும் உரிமங்கள் இனி வாழ்நாள் முழுவதும் செல்லுபடியாகும். இதற்கு முன்பு, உணவு வணிக நிறுவனங்கள் தங்கள் பதிவுகளையும் உரிமங்களையும் அவ்வப்போது புதுப்பிக்க வேண்டியிருந்தது. புதிய முறையின் கீழ், புதுப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

வருவாய் வரம்பு உயர்வு: மேலும் பதிவு மற்றும் உரிமம் பெறுவதற்கான விற்றுவருவாய் வரம்பும் உயர்த்தப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் 1, 2026 முதல், ஆண்டு வருமானம் ரூ.1.5 கோடி வரை உள்ள நிறுவனங்களுக்கு அடிப்படைப் பதிவு மட்டுமே போதுமானது (முன்பு ரூ.12 லட்சமாக இருந்தது). ரூ.50 கோடி வரை வருமானம் உள்ள நிறுவனங்கள் மாநில உரிமத்தின் கீழும், ரூ.50 கோடிக்கு மேல் வருவாய் ஈட்டும் நிறுவனங்கள் மத்திய உரிமத்தின் கீழும் வரும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

உணவு சார்ந்த தொழில்கள் செய்வதை எளிதாக்கும் வகையில் இந்த சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இதனால் உணவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் அல்லது வியாபாரிகள் அடிக்கடி அரசு அலுவலகங்களுக்கு அலைய வேண்டிய சுமை குறையும். இதனால் அவர்கள் தங்கள் வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரத் தரங்களைப் பராமரிப்பதில் அதிக கவனம் செலுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தெருவோர வியாபாரிக்கு சலுகை: மற்றொரு முக்கிய சீர்திருத்தம், தெருவோர உணவு வியாபாரிகளுக்கான இரட்டைப் பதிவுகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. புதிய விதிகளின்படி, தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, தெருவோர வியாபார ஒழுங்குமுறை) சட்டம், 2014–ன் கீழ் மாநகராட்சிகள் அல்லது நகர விற்பனைக் குழுக்களிடம் ஏற்கெனவே பதிவு செய்துள்ள வியாபாரிகள், எப்எஸ்எஸ்ஏஐ–ல் தானாகவே பதிவு செய்யப்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

தனியாக பதிவு செய்யத் தேவையில்லை. வெவ்வேறு அதிகாரிகளிடம் இருந்து பல பதிவுகளைப் பெற வேண்டிய அவசியம் நீக்கப்படுவதால் 10 லட்சத்துக்கும் அதிகமான தெருவோர உணவு வியாபாரிகள் பயனடைவார்கள்.

## தூத்துக்குடியில் தேர்தல் நடத்தை விதிகள் அமல்: மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ரத்து!



தூத்துக்குடி.மார்ச்.16–

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளதால் தூத்துக்குடி மாவட்டத்தில் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக மாவட்ட ஆட்சியர் இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

# பயணிகளுக்கு இலவச சேவை.. இந்தியன் ரயில்வே விதியில் மாற்றம்!




புதுடெல்லி, மார்ச். 16–

இந்தியன் ரயில்வே தனது பயணிகளுக்காக சிறப்பான மற்றும் தரமான திட்டத்தை அறிமுகப்படுத்தப் போகிறது, இந்த திட்டத்தின் கீழ் பயணிகள் இலவச டிக்கெட்டுகளுடன், தேநீர், சிற்றுண்டி மற்றும் உணவு போன்ற வசதிகளைப் பெறுவார்கள். இந்த திட்டமானது கூடிய விரைவில் தொடங்கப்பட உள்ளது. இதன் மூலம் பயணிகள் இந்திய ரயில்வே அறிவித்துள்ள இந்த இலவச வசதிகளை பெற முடியும். இது தொடர்பான கூடுதல் விவரத்தை இந்த பதிவில் காணலாம்.

இந்நிலையில் தற்போது இந்தியன் ரயில்வே (Indian Railway) ஒரு லாயல்டி திட்டத்தைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.

வழக்கமான பயணிகளுக்கு வெகுமதி அளிப்பதும், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பயணிக்க மக்களை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும். மலிவு விலை விமானச் சேவைகளை நோக்கி அதிகளவில் ஈர்க்கப்பட்டு வரும் பயணிகளைத் தக்கவைத்துக்கொள்வதை இலக்காகக் கொள்ளவே ரயில்வே இந்த திட்டத்தை அறிமுகம் படுத்த திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

ரயில்வே லாயல்டி திட்டம் (Railway Loyalty Program)?

ரயில்வேயின் லாயல்டி திட்டத்தின் கீழ், அடிக்கடி ரயிலில் பயணிக்கும் பயணிகளுக்கு கிலோமீட்டர் கணக்கீட்டில் வெகுமதி புள்ளிகள் வழங்கப்படும், இந்த புள்ளிகளை பயணிகள் உணவு முதல் கட்டணம் வரை எதற்கும் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். ரயில்வே வாரியத்தின் கூற்றுப்படி, கூடிய விரைவில் ஐ.ஆர்.சி.டி.சி (IRCTC – Indian Railway Catering and Tour–ism Corporation) போர்டல் மேம்படுத்தப்பட்டு, டிஜிட்டல் வாலெட்டாக புதுப்பிக்கப்படும். மேலும் எந்த பயணி அதிக தூரம் பயணிக்கிறாரோ, அவர்களுக்கு அதிக ரயில் புள்ளிகளை வழங்கப்படும். இந்தப் புள்ளிகளை பிறகு பணமாக மாற்றி பயன்படுத்திக் கொள்ளலாம். இந்தத் திட்டம் ஏப்ரல் மாதத்தில் வந்தே பாரத் (Vande Bharat Express) மற்றும் தேஜாஸ் எக்ஸ்பிரஸ் (Tejas Express) போன்ற பிரீமியம் ரயில்களில் சோதனை முறையில் செயல்படுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**டிஜிட்டல் அமைப்புகள்**

இந்த திட்டம், நாள்தோறும் லட்சக்கணக்கான பரிவர்த்தனைகளைக் கையாளும் திறன் கொண்ட ஒரு டிஜிட்டல் அமைப்பை (Digital systems) உருவாக்குவதை உள்ளடக்கியதாகும். மேலும், இது பயணிகளின் தரவுகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதோடு, வெகுமதிகள் துல்லியமாகவும் காலதாமதமின்றியும் பயனர்களுக்குச் சென்றடைவதை உறுதிசெய்யும். இந்திய ரயில்வேயிடம் தற்போது ஒரு முழுமையான 'Loyalty Sys–tem' இல்லாத நிலையில், இத்திட்டம் ஒரு வாய்ப்பாக அமைய உதவும். மேலும் சாலை அல்லது விமானப் போக்குவரத்தை விட ரயில் பயணமே சுற்றுச்சூழலில் குறைந்த அளவிலான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதால், பயணிகள் மற்றும் பொருட்களை அனுப்பும் வாடிக்கையாளர்கள் ரயில் பயணத்தை தேர்ந்தெடுக்க ஊக்குவிப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

**இந்த திட்டத்தின் மூலம் பயணிகளுக்கு என்னென்ன நன்மைகள் கிடைக்கும்?**

இந்தியன் ரயில்வே தொடங்கப் போகும் இந்த திட்டமானது, உலகின் மிகப்பெரிய லாயல்டி திட்டமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி திட்டமானது 7,000 க்கும் மேற்பட்ட ரயில் நிலையங்களையும், 3,500 கி.மீ. நீளமுள்ள ரயில்களையும் உள்ளடக்கும், அதனுடன் தினமும் 30 மில்லியன் பயணிகள் பயணிக்க அனுமதிக்கும். இதன் மூலம் வெகுமதி புள்ளிகள் உயர்வு பெறும், இதனால் பயணிகளுக்கு நன்மை உண்டாகும். குறிப்பாக பயணிகள் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்யும் போது அடிப்படை கட்டணத்தில் தள்ளுபடி பெறுவார்கள் அல்லது இந்த புள்ளிகளின் அடிப்படையில் இலவசமாக டிக்கெட் முன்பதிவு செய்து கொள்ளும் வசதியை பயணிகள் பெறுவார்கள்.

**இந்த வெகுமதிப் புள்ளிகள் (Reward Points) பல்வேறு சலுகைகளை வழங்குகின்றன:**

1. பயணிகள் ரயில் டிக்கெட் முன்பதிவு செய்யும்போதே அடிப்படை கட்டணத்தில் தள்ளுபடியைப் பெற முடியும்.

2. தங்கள் கணக்கில் சேர்க்கப் படும் இந்த புள்ளிகளின் மூலம் முழு டிக்கெட்டையும் முற்றிலும் இலவசமாகப் பயணிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

3. இந்த புள்ளிகளை வைத்து பயணிகள் தங்களின் பயணத்தின்போது, ரயில் நிலையங்களில் உள்ள ஆடம்பர ஓய்வறைகளில் (Luxury Lounges) இலவசமாக ஓய்வெடுத்துக் கொள்ள முடியம்.

4. 'இ–கேட்டரிங்' (e–catering) வசதி வாயிலாக பயணிகள் தாங்கள் விரும்பும் உணவுகளை இலவசமாக ஆர்டர் செய்துக் கொள்ள முடியும்.

5. கூடுதலாக, இந்த புதிய திட்டத்தின் மூலம் பயணிகள் 3–ஆம் வகுப்பு ஏசி (Third AC) பிரிவிலிருந்து 2–ஆம் வகுப்பு ஏசி–க்கும் (Second AC), 2–ஆம் வகுப்பு ஏசி பிரிவிலிருந்து 1–ஆம் வகுப்பு ஏசி–க்கும் (First AC) டிக்கெட்டுகளைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும்.

IRCTC இணையதளம் அல்லது செயலி வாயிலாக டிக்கெட் முன்பதிவு செய்யும்போது வெகுமதிகளைப் பயணிகள் பெறுங்கள்; மேலும் பிரீமியம் அட்டைகள், செலவிடப்படும் ஒவ்வொரு ₹100–க்கும் 10 வெகுமதிப் புள்ளிகள் வரை வழங்கப்படும். IRCTC SBI Card, IRCTC BOB Card மற்றும் IRCTC RBL Card போன்ற சிறப்பு அட்டைகள், அதிக வெகுமதிப் புள்ளிகள், பரிவர்த்தனைக் கட்டண விலக்குகள் மற்றும் வரவேற்பு போனஸ்களை வழங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு
## என்எல்சி நிறுவனத்தில் காலியிடங்கள் அறிவிப்பு!




மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான என்எல்சி நிறுவனத்தில் நிரப்பப்பட உள்ள 21 சுகாதார ஆய்வாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து வரும் ஏப்ரல் 2 ஆம் தேதிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணி: Pharmacist Gr.B
காலியிடங்கள்: 15
சம்பளம்: மாதம் ரூ.22,000 – 90,000
பணி: Ophthalmic Technician
காலியிடங்கள்: 2
சம்பளம்: மாதம் ரூ. 23,000 – 95,000
பணி: Theatre Assistant
காலியிடங்கள்: 2
சம்பளம்: மாதம் ரூ. 20,000 – 81,000
Advertise with us
பணி: Audiologist and Speech Therapist
காலியிடங்கள்: 1
சம்பளம்: மாதம் ரூ.24,000 – 1,00,000
பணி: Dental Mechanic
காலியிடங்கள்: 1
சம்பளம்: மாதம் ரூ.22,000 – 90,000

தகுதி: ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியான தகுதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதால் அதிகாரப்பூர்வ அறிவிப்பை பார்த்து தெரிந்துகொள்ளவும்.

வயதுவரம்பு: 1.2.2026 தேதியின்படி 18 முதல் 30–க்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: எழுத்துத் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் மருத்துவ பரிசோதனை தேர்வு மூலம் தகுதியானவர்கள் தேர்வு செய்யப்படுவர்.

விண்ணப்பக் கட்டணம்: எஸ்சி, எஸ்டி, முன்னாள் ராணுவத்தினர், மாற்றுத்திறனாளி பிரிவினர் ரூ.236, இதர அனைத்து பிரிவினர் ரூ.486 செலுத்த வேண்டும். கட்டணத்தை ஆன்லைன் மூலம் செலுத்த வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை: என்ற இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 2.4.2026

## ஆண்டிபட்டியில் துணை ராணுவத்தினர் துப்பாக்கி ஏந்தியபடி கொடி அணிவகுப்பு!



ஆண்டிபட்டி, மார்ச். 16–

தமிழகத்தில் அடுத்த மாதம் 23–ந் தேதி ஒரே கட்டமாக சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு, தேனி மாவட்டம், ஆண்டிபட்டி தொகுதியில் தேர்தல் பாதுகாப்புப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, பொதுமக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் துணை ராணுவத்தினர் மற்றும் போலீசார் பங்கேற்ற பிரம்மாண்ட கொடி அணிவகுப்பு ஊர்வலம் நடைபெற்றது.

## பழனி முருகன் கோவில் பங்குனி உத்திரம் திருவிழா!



பழனி, மார்ச் 16–

பழனியில் புகழ்பெற்றது பங்குனி உத்திரம் திருவிழாவாகும். இந்த திருவிழாவின் முக்கிய அம்சமே, பக்தர்கள் கொடுமுடி காவிரி ஆற்றின் நீரை சிறு சிறு குடங்களில் சேகரித்து தீர்த்தக்காவடியாக எடுத்து வருவார்கள். பின்பு மேளதாளங்கள் முழங்க பழனி வரும் அவர்கள் தீர்த்தக்காவடி நீரை பழனி முருகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்து வழிபாடு செய்வார்கள். பழனி பங்குனி உத்திரம் திருவிழா 10 நாட்கள் நடைபெறும். திருவிழாபழனிதிருஆவிணன்குடி முருகன் கோயிலில் வரும் மார்ச் 26 ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. வரும் மார்ச் 31 ஆம் தேதி திருக்கல்யாணம் நடைபெறுகிறது. ஏப்ரல் 1ஆம் தேதி பங்குனி உத்திரம் திருத்தேரோட்டம் நடைபெறுகிறது. இதற்கான விழா ஏற்பாடுகளை பழனி கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து செய்து வருகிறார்.



# அரசு அலுவலர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள்! தேர்தல் ஆணையம் வெளியீடு....!




சென்னை, மார்ச். 16–

தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறுகிறது. அதன்படி, ஏப்ரல் 23 (வியாழக்கிழமை) அன்று தேர்தல் நடைபெற உள்ளது. இதையடுத்து வாக்கு எண்ணிக்கை மே 4 (திங்கட்கிழமை) நடைபெறுகிறது. அன்றைய தினம் மதியமே ஆட்சியை கைப்பற்றப்போவது யார் என்பது தெரிய வரும். இந்த நிலையில்,அரசு அலுவலர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிகாட்டு நெறி முறைகளை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

**1. விளம்பரங்களை அகற்றுவதற்கான காலக்கெடு:**

* பொது இடங்கள்: (ரயில் நிலையம், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், இரயில்வே பாலங்கள், சாலைகள், அரசு பேருந்துகள், மின்சாரம், தொலைபேசி கம்பங்கள்): 48 மணி நேரத்திற்குள்.

* தனியார் இடங்கள்: 72 மணி நேரத்திற்குள்.

**2. அரசு கட்டிடங்கள் மற்றும் அரசு வாகனங்கள் கட்டுப்பாடுகள்:**

* தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் (எம்.எல்.ஏ / எம்.பி) அலுவலகங்களைப் பூட்டி பொதுப்பணித்துறை வசம் சாவி ஒப்படைக்கப்பட வேண்டும்.

* அரசு விருந்தினர் மாளிகைகளில் எந்த ஒரு அரசியல் கட்சியினரும் அனுமதிக்கப்படக் கூடாது.

* தேர்தல் பிரச்சாரம் அல்லது தேர்தல் தொடர்பான பயணங்களுக்கு எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது தேர்தல் தொடர்பான நபர்களோ அரசு வாகனங்களைப் பயன்படுத்த முழுமையான தடை விதிக்கப்படுகிறது.

* தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் வாரியத் தலைவர்கள் ஆகியோர் உபயோகப்படுத்தும் அரசு வாகனங்களை திரும்பப் பெற வேண்டும்.

**3. அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு இணையதளங்களில் புகைப்படங்கள்/ செய்திகள்:**

* தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமல்படுத்தப்பட்ட நாள் முதல் எந்த ஒரு அரசு அலுவலகங்களிலும் அரசியல் சார்ந்த படங்கள், காலண்டர்கள், நலத்திட்ட ஸ்டிக்கர்கள், பிரதமர், முதலமைச்சர், அமைச்சர்களின் படங்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. அவை உடனடியாக அகற்றப்பட வேண்டும்.

**அரசியல் பகுப்பாய்வு**

* அரசு இணையதளங்கள் மற்றும் கட்டிடங்களில் உள்ள அமைச்சர்கள் அல்லது அரசியல் தலைவர்களின் புகைப்படங்கள் மற்றும் சாதனைகள் குறித்த செய்திகளை நீக்க வேண்டும் அல்லது மறைக்க வேண்டும்.

**4.நலத்திட்டங்கள்:**

* துறை சார்ந்த நலத்திட்ட விழாக்கள் நடத்திட அனுமதி இல்லை.

* சிறப்பு மருத்துவ சிகிச்சை மற்றும் கால்நடைகள் மருத்துவ சிகிச்சைகளின் போது விளம்பர பேனர்கள் வைத்திருக்கக் கூடாது.

**5.கூட்டங்கள்:**

* மக்கள் குறைதீர் நாள் மனுக்கள் மற்றும் இதர மனுக்கள் பெறும் நிகழ்வுகள் தடை செய்யப்படுகிறது.

* மாநிலங்களின் முதலமைச்சர்கள், அமைச்சர்கள் மற்றும் ஒன்றிய, மாநில அரசுகளின் பிற அரசியல் பிரமுகர்கள் மற்றும் அலுவலர்களுக்கிடையே தனித்தனியாக அல்லது கூட்டாக காணொலி காட்சி மூலம் ஆய்வுகள் நடைபெறக்கூடாது.

**6. அரசு விளம்பரங்கள் வழிகாட்டுதல்கள்:**

* அரசியல் தலைவர்களை மிகைப்படுத்தும் விளம்பரங்கள் மற்றும் ஒரு கட்சிக்கு ஆதரவான விளம்பரங்கள் உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

* அரசு செய்திகளை திறம்பட கொண்டு சேர்க்கத் தேவைப்பட்டால் மட்டுமே குடியரசுத் தலைவர் அல்லது பிரதமரின் புகைப்படங்களை பயன்படுத்தலாம்.

**7.திட்டங்கள் செயல்படுவதற்கான கட்டுப்பாடுகள் பின்வருமாறு: பிரத்யேக செய்திகள்**

அ) தொடரக்கூடிய பணிகள்:

பின்வரும் பணிகளைத் தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதி இன்றி அரசு முகமைகள் தொடரலாம்:

* முழு நிதியுதவி ஒதுக்கீடு செய்யப்பட்டவை

* நிர்வாக, தொழில்நுட்ப மற்றும் நிதி ஒப்புதல்கள் பெறப்பட்டவை.

* டெண்டர் அறிவிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ள இனங்கள்.

* ஒத்திவைக்க முடியாத இதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை போன்ற பல்வேறு நேர வரையறை கொண்ட சிகிச்சைகளுக்கு பிரதமரின் நிவாரண நிதி அல்லது முதலமைச்சரின் நிவாரண நிதியின் கீழ் மருத்துவ உதவியைத் தொடர்புடைய அரசு அதிகாரிகள் அல்லது தனியார் மருத்துவ மனைகளின் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நோயாளிகளுக்கு வழங்குதல்.

ஆ). புதிய பணிகள் (நிபந்தனைகளுக்கு உட்பட்டவை):

* புதிய திட்டங்கள், சலுகைகள் அல்லது நிதி உதவித் தொகைகளை அறிவிப்பது அல்லது அதற்கான வாக்குறுதிகள் அளிப்பது அல்லது அடிக்கல் நாட்டுதல் போன்றவை தடைசெய்யப்பட்டுள்ளன.

பின்வரும் நடவடிக்கைகளுக்குத் தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதி கட்டாயம்:

* எந்தவொரு விருப்ப அதிகார நிதியிலிருந்தும் புதிய பணிகளையோ திட்டங்களையோ தொடங்குதல்.

* தற்போதுள்ள திட்டங்களின் செயல்பாட்டுப் பகுதியை விரிவுபடுத்துதல்.

* தனிநபருக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அரசு நிலம் ஒதுக்கீடு செய்தல்.

* சர்வதேச டெண்டர்கள் தவிர்த்து, ஏற்கனவே விடப்பட்ட மற்ற டெண்டர்களை இறுதி செய்தல் (மதிப்பீடு செய்யலாம், ஆனால் இறுதி செய்யக்கூடாது). டெண்டர்கள் இதுவரை விடப்படவில்லை எனில், அனுமதி இன்றி வெளியிடக்கூடாது.

* பிரதமரின் அல்லது முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து குறிப்பிட்ட குழுவினருக்கு எந்தவித தேர்ந்தெடுக்கப்பட்ட உதவியும் வழங்குவதற்கும் ஆணையத்தின் முன்அனுமதி தேவை.

**8.பணி நியமனக் கட்டுப்பாடுகள்:**

*** தற்காலிகப் பணி நியமனங்கள் செய்யக்கூடாது.**

* சட்டரீதியற்ற அமைப்புகள் (Non–statutory bodies) மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்களுக்குத் தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதி பெற வேண்டும்.

* அரசின் புதிய நலத்திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் புதிய பயனாளிகள் தேர்வு செய்தல் நிறுத்தி வைக்கப்படுகிறது.

**9.தேர்தல் தொடர்பான அதிகாரிகளை இடமாற்றம் செய்யத் தடை:**

* தேர்தல் பணிகள் தொடர்புடைய அலுவலர்களின் பணியிடமாற்றம்.

* மாவட்ட தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் தேர்தல் நடத்துதலுடன் தொடர்புடைய பிற வருவாய் அலுவலர்கள்.

* மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951 இன் பிரிவு 28A இன் கீழ் சரக ஐஜி–க்கள் மற்றும் டிஐஜிக்கள், மூத்த காவல்துறை கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் போன்ற துணைப் பிரிவு அளவிலான காவல்துறை அதிகாரிகள் மற்றும் ஆணையத்திற்குப் பணியமர்த்தப்பட்ட பிற காவல்துறை அதிகாரிகள் போன்ற தேர்தல் நிர்வாகத்துடன் தொடர்புடைய காவல் துறை அதிகாரிகள்.

* தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட பிற அலுவலர்கள், மண்டல அலுவலர்கள், போக்குவரத்துப் பிரிவு, வாக்குப்பதிவு பொருட்கள் கொள்முதல் மற்றும் விநியோகப் பிரிவு, பயிற்சி பிரிவு, அச்சு பிரிவு போன்றவை தேர்தல் நிர்வாகத்தில் பங்கு வகிக்கும் மூத்த அலுவலர்களும் இந்த வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டவர்கள்.

* இந்தத் தடை தேர்தல் செயல்முறை முடிவடையும் வரை செயல்பாட்டில் இருக்கும்.

* இந்த காலகட்டத்தில், அரசு / பொது நிறுவனங்களில் எந்த நியமனங்கள் அல்லது பதவி உயர்வுகள் தேர்தல் ஆணையத்தின் முன் அனுமதி இல்லாமல் செய்யப்படக் கூடாது.

**10.எம்.பி / எம்.எல்.ஏ தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் விருப்ப அதிகார நிதி கட்டுப்பாடுகள்:**

* மாதிரி நடத்தை விதிமுறைகள் அமலில் இருக்கும் காலத்தில், MPLAD திட்டத்தின் கீழ் எந்த ஒரு புதிய திட்டத்திற்கும் அனுமதி அளிக்கக்கூடாது என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இருப்பினும், ஒரு பணி ஏற்கனவே களத்தில் தொடங்கப்பட்டிருந்தால், அதைத் தொடர்ந்து நடத்தலாம்.

* தேர்தல் நடைபெறும் நாட்டின் எந்தப் பகுதியிலும் MPLAD (மாநிலங்களவை உறுப்பினர்கள் உட்பட) நிதியின் கீழ் புதிய நிதி விடுவிப்பு செய்யப்படக்கூடாது.

இதேபோல், எம்.எல்.ஏ / எம்.பி தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழும் புதிய நிதி விடுவிப்புகள் தேர்தல் முடியும் வரை செய்யப்படக்கூடாது.

* முடிவடைந்த பணிகளுக்கான தொகையை விடுவிப்பதற்குத் தடை ஏதுமில்லை.

* திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்பட்டு, பொருட்கள் தளத்திற்கு வந்து சேர்ந்திருந்தால், அத்திட்டத்தை நிலத்தவறாமல் செயல்படுத்தலாம்.

**11.கடன் தள்ளுபடி மற்றும் வாராக்கடன்கள்:**

* மாநில அரசால் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிதியளிக்கப்படும் நிதி நிறுவனங்கள், தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு வழங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்யக்கூடாது.

* தேர்தல் ஆணையத்தின் முன்அனுமதியின்றி எதையும் தள்ளுபடி செய்யக்கூடாது மற்றும் புதிய கடன்களை வழங்கக்கூடாது.

**12.பொது நிதியில் விளம்பரங்கள் வெளியிடுதல்:**

* ஆளும் கட்சியின் சாதனைகளை விளம்பரப்படுத்துவதற்கும் அதன் தேர்தல் வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கும் அரசு நிதியைப் பயன்படுத்துவதை நடத்தை விதிகள் கட்டுப்படுத்துகின்றன.

* உலக இருப்பிட நாள் (World Habitat Day), போலியோ சொட்டு மருந்து, எய்ட்ஸ் விழிப்புணர்வு போன்ற சிறப்பு தின விளம்பரங்களை வெளியிடத் தடை இல்லை, ஆனால் அவற்றில் புகைப்படங்களைப் பயன்படுத்தக்கூடாது.

**13. பள்ளி மைதானங்களை பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துதல் விதிமுறைகள்:**

* கல்விச் செயல்பாடுகள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கல்வி அட்டவணை அல்லது வகுப்புகள் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது.

* எந்தவொரு அரசியல் கட்சியும் இத்தகைய மைதானங்களைத் தனது சொந்தக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவோ அல்லது முற்றுரிமை பெறவோ கூடாது. அனைத்துக் கட்சிகளுக்கும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.


# பிளஸ்-2 பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி ஏப்ரல் 9-ந்தேதி தொடக்கம்!

சென்னை, மார்ச். 16–

தமிழகத்தில் பிளஸ்–2 பொதுத்தேர்வு கடந்த 2–ந்தேதி தொடங்கி நடந்து வருகிறது. மொத்தம் 8 லட்சத்து 27 ஆயிரத்து 475 மாணவ, மாணவிகள் இந்தத் தேர்வை எழுதுகிறார்கள். இதுவரை மொழிப்பாடங்கள் உள்பட 4 தேர்வுகள் முடிவடைந்துள்ள நிலையில், நாளை (செவ்வாய்கிழமை) கணிதம், உயிரியல், வணிகவியல், நுண் உயிரியல் உள்ளிட்ட தேர்வுகள் நடைபெற இருக்கின்றன. அடுத்து 23 (திங்கட்கிழமை) மற்றும் 26–ந்தேதிகளில் (வியாழக்கிழமை) தேர்வுகள் நடக்கிறது. அத்துடன் பிளஸ்–2 பொதுத்தேர்வுகள் முடிவடைகின்றன.

அதனைத் தொடர்ந்து, பொதுத்தேர்வு விடைத்தாள்கள் வரும் 28–ந்தேதி மண்டல விடைத்தாள் சேகரிப்பு மையங்களுக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட உள்ளன. பின்னர், அங்கிருந்து விடைத்தாள் மதிப்பீட்டு மையங்களுக்கு ஏப்ரல் 4–ந்தேதி அனுப்பிவைக்கப்படுகின்றன.

முதன்மை தேர்வாளர்கள் ஏப்ரல் 8–ந்தேதி விடைத்தாள்களை மதிப்பீடு செய்வார்கள். உதவி தேர்வாளர்கள், ஏப்ரல் 9–ந்தேதி முதல் ஏப்ரல் 20–ந்தேதி வரை மதிப்பீடு செய்யும் பணியில் ஈடுபடுவார்கள் என அரசு தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது. பிளஸ்–2 பொதுத்தேர்வு முடிவுகள் மே மாதம் 8–ந்தேதி வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது.



## சினிமா துளிகள்..!

### வைரமுத்துவை பாராட்டிய ரஜினிகாந்த், கமல்... சின்மயியின் கருத்து என்ன தெரியுமா?



கவிஞரும், பாடலாசிரியருமான வைரமுத்து அவர்களுக்கு இந்திய இலக்கிய உலகின் உயரிய விருதான ஞானபீட விருது வழங்கப்பட்டிருப்பது தமிழ் இலக்கிய மற்றும் திரையுலகில் பெரிய விவாதத்தையும் கவனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சுமார் 24 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு இந்த உயரிய விருது கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாக பார்க்கப்படுகிறது. இதற்கு முன்பு தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் அகிலன் (1975) மற்றும் Jayakanthan (2002) ஆகியோருக்கு மட்டுமே இந்த விருது வழங்கப்பட்டிருந்தது. அந்த வரிசையில் தற்போது வைரமுத்து இணைந்திருப்பது பலரிடையே பெருமையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. சமூக வலைதளங்கள் முதல் அரசியல், இலக்கிய, திரையுலக பிரபலங்கள் வரை பலரும் அவருக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

பாடலாசிரியராக மட்டுமல்லாமல் இலக்கிய எழுத்தாளராகவும் வைரமுத்து பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். அவரது ‘கள்ளிக்காட்டு இதிகாசம்’, ‘கருவாச்சி காவியம்’, ‘மூன்றாம் உலகப்போர்’ போன்ற நாவல்கள் வாசகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. மேலும் அவர் எழுதிய ஆயிரக்கணக்கான திரைப்படப் பாடல்களை தொகுத்து ‘ஆயிரத்தொரு பாடல்கள்’ என்ற நூலை வெளியிடவும் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த படைப்பாற்றல், தமிழ் மொழிக்கான பங்களிப்பு மற்றும் இலக்கிய சாதனைகளை கருத்தில் கொண்டு அவருக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விருதை பெற்றதையடுத்து பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்கள் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். அதில் நடிகர் Rajinikanth தனது எக்ஸ் (முன்னாள் ட்விட்டர்) பக்கத்தில், “நம் இந்திய நாட்டின் மிக உயர்ந்த இலக்கிய விருதான ஞானபீடத்தை பெற்றிருக்கும் எனது அருமை நண்பர் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள்” என்று பதிவு செய்திருந்தார். இந்த பதிவு சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது.

இந்நிலையில் பின்னணி பாடகியும் டப்பிங் கலைஞருமான Chinmayi Sripaada, ரஜினிகாந்தின் அந்த பதிவை ரீட்வீட் செய்து “அய்யோ புரியவே புரியாதா” என்று குறிப்பிட்டிருந்தார். அவரது இந்த பதிவு சமூக வலைதளங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மேலும் இதற்கு முன்பாக அவர் வெளியிட்ட மற்றொரு பதிவில், “2018ஆம் ஆண்டு பல பெண்கள் ஒரே கவிஞர் மற்றும் பாடலாசிரியர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். ஆனால் இன்று அந்த மனிதருக்கே ஞானபீட விருது வழங்கப்பட்டுள்ளது. அதுவும் ஜெயகாந்தனுக்கு பிறகு வழங்கப்படுவது மிகவும் வேதனையான விஷயம்” என்று கூறியிருந்தார்.

அத்துடன், ஜெயகாந்தன் தன்னைப் பாராட்டியதாக வைரமுத்து வெளியிட்டதாகக் கூறப்பட்ட கடிதம் குறித்து ஜெயகாந்தனின் மகள் அது போலி என கூறியிருந்ததாகவும் சின்மயி தனது பதிவில் குறிப்பிட்டார். மேலும் கேரளாவில் ஓ. என். வி. குரூப் பெயரில் வழங்கப்படும் விருதுக்கு ஒருகட்டத்தில் வைரமுத்து தேர்வு செய்யப்பட்டிருந்தாலும் பின்னர் எதிர்ப்புகள் எழுந்ததால் அந்த முடிவு திரும்பப் பெறப்பட்டது என்றும் அவர் கூறினார். “அவர்மீது குற்றஞ்சாட்டிய பெண்களின் குரல்கள் அமைதியாக்கப்பட்டுவிட்டன. இந்த விஷயத்தில் நான் மிகப்பெரிய விலையை கொடுத்திருக்கிறேன்” என்றும் சின்மயி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சமூக வலைதளங்களில் இரு தரப்பினரிடையே கடும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. ஒரு தரப்பு வைரமுத்துவின் இலக்கிய சாதனைகளை முன்னிறுத்தி அவருக்கு வழங்கப்பட்ட விருதை வரவேற்கும் நிலையில், மற்றொரு தரப்பு அவர்மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை மீண்டும் முன்வைத்து கேள்வி எழுப்பி வருகிறது. இதனால் வைரமுத்துவுக்கு வழங்கப்பட்ட ஞானபீட விருது தற்போது இலக்கிய உலகை மட்டுமின்றி சமூக வலைதளங்களிலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணிக்கு த.வெ.க. வருமா? வராதா?



சென்னை, மார்ச். 16–

த.வெ.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை கட்சியின் பொதுச் செயலாளர் என். ஆனந்த் நடத்தினார். அப்போது, “தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடலாமா?, தனித்து போட்டியிடலாமா?” என்று நிர்வாகிகளிடம் அவர் கருத்து கேட்டுள்ளார். அப்போது, பெரும்பாலான மாவட்ட செயலாளர்கள், “கூட்டணி அமைத்தே தேர்தலை சந்திக்கலாம்” என்று கருத்து தெரிவித்துள்ளனர். “அப்படி என்றால், உங்களில் பெரும்பாலானவர்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காத நிலை ஏற்படும்” என்று ஆனந்த் கூறியுள்ளார். அதற்கும் நிர்வாகிகள், “கட்சியின் வளர்ச்சியே இப்போது முக்கியம்” என்று சொல்லியுள்ளனர்.

**டெல்லியில் பேச்சு வார்த்தை**

இந்த நிலையில்தான், சி.பி.ஐ. விசாரணைக்காக நேற்று முன்தினம் த.வெ.க. தலைவர் விஜய் டெல்லி சென்றார். அவருடன் நிர்வாகிகள் ஆதவ் அர்ஜூனா, விஷ்ணு ரெட்டி ஆகியோர் சென்றனர்.

அன்று இரவு ஆதவ் அர்ஜூனா, விஷ்ணு ரெட்டி ஆகியோரை டெல்லி கோல்ப் கிளப் அருகே பா.ஜ.க. மேலிட தலைவர்கள் தனியாக சந்தித்து பேசியதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அப்போது, “த.வெ.க. தனித்து போட்டியிட்டால் தி.மு.க. எளிதில் வென்றுவிடும். தி.மு.க.வை வீழ்த்த வேண்டும் என்று த.வெ.க. நினைத்தால், தேசிய ஜனநாயக கூட்டணியில் இணையுங்கள்” என்று கூறினார்களாம்.

**பா.ஜ.க. கடைசி முயற்சி வெற்றி பெறுமா?**

இதுகுறித்து, ஆதவ் அர்ஜூனா, விஷ்ணு ரெட்டி ஆகிய இருவரும் விஜய்யிடம் பேசியிருக்கிறார்கள். ஆனால், விஜய் எந்த முடிவையும் தெரிவிக்கவில்லை. தொடர்ந்து, அமைதி காத்து வருகிறார். இதனால், த.வெ.க. நிர்வாகிகள் குழப்பம் அடைந்துள்ளனர். மேலும், பா.ஜ.க.வின் கடைசி முயற்சியும் வெற்றி பெறுமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# ஆஸ்கர் 2026: விருதுகளை அள்ளிய ‘ஒன் பேட்டில் ஆஃப்டர் அனதர்’!




லாஸ் ஏஞ்சல்ஸ், மார்ச். 16–

98–வது அகாடமி விருதுகள் (ஆஸ்கார்) வழங்கும் விழா லாஸ் ஏஞ்சல்ஸில் உள்ள டால்பி தியேட்டரில் நேற்று (மார்ச் 16) நடைபெற்றது. இந்த விழாவில், இயக்குநர் பால் தாமஸ் ஆண்டர்சனின் ஒன் பாட்டில் ஆஃப்டர் அனதர் (‘One Battle After Another’) திரைப்படம் 6 விருதுகளை வென்று விழாவில் ஆதிக்கம் செலுத்தியது.

அதே சமயம், ரியான் கூக்ளரின் சின்னர்ஸ் (‘Sinners’) திரைப்படம் 4 விருதுகளை வென்றுள்ளது.

சிறந்த படம் மற்றும் சிறந்த இயக்குநர் விருது ஒன் பாட்டில் ஆஃப்டர் அனதர் படத்திற்காக, பால் தாமஸ் ஆண்டர்சன், சின்னர்ஸ் படத்திற்காக சிறந்த நடிகருக்கான பிரிவில், மைக்கேல் பி ஜோர்டான், ஹம்னிட் (Hamnet) படத்திற்காக சிறந்த நடிகை விருது ஜெஸ்ஸி பக்லிக்கு வழங்கப்பட்டது. ஒன் பாட்டில் ஆஃப்டர் அனதர் படத்தில் நடித்த நடிகர் சீன் பென்னுக்கு சிறந்த துணை நடிகருக்கான விருது வழங்கப்பட்டது. வெப்பன்ஸ் (Weapons) படத்திற்காக சிறந்த துணை நடிகை விருது ஆமி மடிகனுக்கு வழங்கப்பட்டது.

இயக்குநர் கில்லர்மோ டெல் டோரோவின் ஃப்ராங்கின்ஸ்டின் (‘Frankenstein’) திரைப்படம் ஆஸ்கார் பந்தயத்தில் முன்னணியில் இருந்து மொத்தம் 3 விருதுகளை வென்றது. ஆஸ்கார் 2026–ல் இந்தியாவுக்கு பெரிய எதிர்பார்ப்புகள் ஏதுமில்லை. குறிப்பாக, இயக்குநர் நீரஜ் கெய்வானின் ஹவுஸ்மெய்டு (‘Homebound’) (2025) திரைப்படம் சிறந்த சர்வதேச திரைப்படப் பிரிவில் இறுதி 5 இடங்களுக்குள் நுழையத் தவறியது. இருப்பினும், இந்தியப் பிரதிநிதித்துவம் விழாவில் காணப்பட்டது:

நடிகையும் தயாரிப்பாளருமான பிரியங்கா சோப்ரா ஜோனாஸ் விருது வழங்குபவர்களில் ஒருவராக இருந்தார். இந்திய–அமெரிக்க ஆவணப்பட இயக்குநர் கீதா காந்த்பீர், தி ஃபர்பெக்ட் நெய்பர் (‘The Perfect Neighbor’) மற்றும் தி டெவில் ஈஸ் பிஸி (‘The Devil Is Busy’) ஆகிய படங்களுக்காக இரண்டு பரிந்துரைகளைப் பெற்றிருந்தார். இருப்பினும், அவருக்கு விருதுகள் கிடைக்கவில்லை.

தொலைக்காட்சித் தொகுப்பாளரும் நகைச்சுவை நடிகருமான கோனன் ஓ’பிரையன் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக விழாவைத் தொகுத்து வழங்கினார். பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்த விழா, “ஹாலிவுட்டின் மிகப்பெரிய இரவு” என்ற புகழுக்கு ஏற்ப அமைந்தது. இந்திய நேரப்படி அதிகாலை 4:30 மணிக்கு நேரலை ஒளிபரப்பு தொடங்கியது.

# தொடர்ந்து சரிந்து வரும் தங்கம் விலை!



சென்னை, மார்ச். 16–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ரூ.1,17,680–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.50 குறைந்து ரூ.14,710–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.4 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.276–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020